**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண்.MCOP.No.8/2022** **P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | பவானி | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை 23.08.2023**

நான் இந்த வழக்கில் என் மைனர் மகன் கமலேஷ் என்பவரின் பாதுகாவலர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான். 1 முதல் 17 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்

1. ம.சா.ஆ.1 - 12.08.2020 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல்.
2. ம.சா.ஆ.2 - 22.12.2020 தேதியிட்ட குற்றப்பிரிவு மாற்று அறிக்கை ஜெராக்ஸ் நகல்.
3. ம.சா.ஆ.3 - 12.08.2020 தேதியிட்ட பிரேத பரிசோதனை ஜெராக்ஸ் நகல்.
4. ம.சா.ஆ.4 - 12.08.2020 தேதியிட்ட விபத்து பதிவேடு ஜெராக்ஸ் நகல்.
5. ம.சா.ஆ.5 - 22.08.2020 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் பில் ஜெராக்ஸ் நகல்.
6. ம.சா.ஆ.6 - 14.10.2020 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் பில் ஜெராக்ஸ் நகல்.
7. ம.சா.ஆ.7 - 13.03.2021 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் பில் ஜெராக்ஸ் நகல்.
8. ம.சா.ஆ.8 - முதல் எதிர்மனுதாரரின் ஆர்.சி.புத்தகம் ஜெராக்ஸ் நகல்.
9. ம.சா.ஆ.9 - முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு ஜெராக்ஸ் நகல்.
10. ம.சா.ஆ.10 - ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல்.
11. ம.சா.ஆ.11 - முதல் மனுதாரரின் ஆதார் அட்டை மற்றும் மைனர் மகனின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது)
12. ம.சா.ஆ.12 - 22.12.2020 தேதியிட்ட காயச்சான்று ஜெராக்ஸ் நகல்

13. ம.சா.ஆ.13 - 01.09.2020 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல்.

14. ம.சா.ஆ.14 - 13.08.2020 முதல் 23.03.2021 வரை மருத்துவமனையில் செலவிடப்பட்ட மொத்த தொகைக்கான பட்டியல் அசல்.

15. ம.சா.ஆ.15 (23 வரிசை) - 12.10.2020 தேதியிட்ட மருத்துவ செலவினம் அசல்

16. ம.சா.ஆ.16 (42 வரிசை) - 12.08.2020 முதல் 23.03.2021 வரை மருத்துவ செலவினம் அசல்

17. ம.சா.ஆ.17 (13 வரிசை) - போக்குவரத்து செலவினம் அசல்

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.